**தலைப்பு 301 – கூட்டுறவுத்துறை அபிவிருத்தி திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 301 – கூட்டுறவுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 29 ஆந் திகதி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கும் சங்கப் பதிவாளருக்கும் வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 86.99 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 79.62 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 7.37 மில்லியன் அதாவது 8.47 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 63.79 | 62.20 | 1.58 | 2.48 |
| மூலதனம் | 23.20 | 17.42 | 5.79 | 24.95 |
| மொத்தம் | 86.99 | 79.62 | 7.37 | 8.47 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 30101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 5.54 | 3.31 | 2.54 | 3.53 | 20.00 | 11.60 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்திற்குரிய 7002/0000/00/0108/0015/000 ஆம் இலக்க கணக்கில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 37,304 ஆக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்திற்குரிய 6000/0000/00/0017/0032/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கின் மீதி ரூபா 13.68 மில்லியனாக இருந்தன.

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 பொது வைப்புக் கணக்கு

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினது, கூட்டுறவு சங்கங்களின் தேவைகளின் பேரில் மேன்முறையீட்டுக் கட்டணங்கள், நீதிமன்றத் தண்டப்பணம், தீர்ப்பாளர் கட்டணங்கள் என்பன வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. 2010 ஆம் ஆண்டு முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 13.68 மில்லியன் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

30101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,095,823 ஆக இருந்ததுடன், அந் நிலுவை மீதிகள் 01 ஆண்டு முதல் 13 ஆண்டுகள் வரையான காலம் இருந்து வந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) 2016 செப்தம்பர் 30 ஆந் திகதி வரையிலும் 1997, 2001 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் ஓய்வுபெற்ற 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கிருந்த கடன் மீதிகள் ரூபா 662,018 ஆக இருந்ததுடன் ஏனைய அரச நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்ககளிடமிருந்து அறவிடுவதற்கிருந்த கடன் மீதிகள்

ரூபா 224,815 ஆக இருந்தது. இக்கடன் மீதிகள் 01 ஆண்டு முதல் 30 ஆண்டுகள் வரையான பழைய மீதிகளாக இருந்தன.

**3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

---

**3.4.1 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

---

2014 ஒக்தோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அவ்வறிக்கை 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக பொருள் மெய்மையாய்வு 2014 ஆம் ஆண்டிற்காக நடாத்தப்பட்டிருந்தது.

**3.5 செயலாற்றல்**

---

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

---

பதிவு செய்யப்பட்டிருந்த 59 கூட்டுறவுச் சங்கங்களில் 26 சங்கங்கள் அளவில் 2015 ஆம் ஆண்டின் போது கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

**(ஆ) திட்டமிடல்**

---

திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சங்கங்களின் 80 கணக்குகளை கணக்காய்வு செய்து 75 அறிக்கைகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது, எனினும் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த பணிப்பொறுப்புக்களின் எண்ணிக்கை 43 ஆக இருந்ததுடன், அதில் விநியோகிக்கப்பட்டிருந்த கணக்காய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை 16 ஆக இருந்தது. மேலும் 13 அறிக்கைகள் மீளாய்வு மட்டத்தில் காணப்பட்டன.

**3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

இலங்கையின் கூட்டுறவுத்துறைக்கு சர்வதேச ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளல், சர்வதேச ரீதியான கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் பெற்றுக்கொண்டு ஒவ்வொரு பிரிவினையும் மேம்படுத்தலுக்கு உட்படுத்தல், நாட்டின் அபிவிருத்திக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பு போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கூட்டுறவுத்துறையின் வெவ்வேறு பிரிவுகளை மேவுகை செய்யும் வகையில் விவசாய கூட்டுறவு துறையினரின் ஒத்துழைப்பு அமைப்பின் அங்கத்துவ நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 40 பேருடன்கூடிய வெளிநாட்டுக் குழுவொன்று கல்விச் சுற்றுலாவிற்கு சமூகமளித்திருந்தது. இதற்காக ரூபா 5,362,792 செலவிடப்பட்டிருந்ததுடன், அதில் 58 சதவீதம் உணவு மற்றும் தங்குமிட வசதிகளுக்காக செலவிடப்பட்டிருந்தது.

## 3.7 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) திணைக்களத்தினால் சுழற்சி நிதியத்திலிருந்து 09 மாகாண நுகர்வோர் சங்கங்களுக்கும் கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்திற்கும் ரூபா 635 மில்லியன் தொகையான கடன்கள் விடுவிக்கப்பட்டிருந்தன. அந்நிதியத்தை செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தல், செயல்முன்னேற்றம் மற்றும் கடன் திருப்பிச் செலுத்தல் இயலுமை தொடர்பாக பரீட்சித்து பகுதி பகுதியாக கடன் வழங்குவதற்குப் பதிலாக ஒரே தடவையில் பாரிய தொகையொன்று நுகர்வோர் சங்கங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சுழற்சி நிதியத்திலிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் கடன் வழங்கப்பட்டிருந்தன. 5 ஆண்டு வருட காலமாக காணப்பட்ட கடன் மீள் அறவீட்டில் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் வழங்கப்பட்ட மொத்தக் கடன்தொகையில் ரூபா 292.9 மில்லியன் அதாவது மொத்தக் கடனில் 46 சதவீதம் அளவில் அறவிடப்பட்டிருந்தது.

(இ) சுழற்சி நிதியத்திலிருந்து வ/ப இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 127,000,000 தொகையில் ரூபா 54,210,209 தொகையான முதலும் நிலுவை வட்டியான ரூபா 648,055 உட்பட முழுத்தொகையாக ரூபா 54,858,265 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஈ) 2015 ஆம் ஆண்டின் போது 08 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 1,102,500 கூட்டுத்தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன், அத்தொகையில் ரூபா 740,421 கூட்டுத்தொகை செலவிடப்படாமல் தீர்க்கப்பட்டிருந்தது. செலவிடப்படாத எஞ்சிய முற்பணத் தொகை 49 சதவீதத்திலிருந்து 80 சதவீதம் வரையான வீச்சளவினைக் கொண்டிருந்தன.

## 3.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 09 | 04 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 02 | 05 |
| (iii) | இரண்டாம் நிலை | 105 | 79 | 26 |
| (iv) | ஆரம்ப நிலை | 20 | 14 | 06 |
| | மொத்தம் | 141 | 99 | 42 |